முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாளையொட்டி

‘செம்மொழியான தமிழ் மொழியாம்”

பல்வேறு கலை இலக்கியப் போட்டிகள்!

சென்னை, ஜூன் 4

தமிழுக்கு செம்மொழி அங்கீகாரம் பெற்றுத் தந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜூன் 3ந்தேதியை தமிழ்நாடு அரசு செம்மொழி நாளாக அறிவித்துள்ளது. இதனையொட்டி செய்தி மக்கள் தொடர்புத்துறை யின் ஊடக மையம் வாயிலாக, ஆதித்தொன்மையும் இலக்கண வளமையும், இலக்கியச் செழுமையும் நிறைந்த தமிழ் மொழி குறித்து “செம்மொழியான தமிழ்மொழியாம்” என்ற தலைப்பில் பல்வேறு கலை இலக்கியப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

அதன் விபரம் வருமாறு:-

செம்மொழி என்பது, ஒரு மொழியின் இலக்கியச் செழுமை தொன்மை, வளம் மற்றும் தனித்தன்மை போன்ற பண்புகளின் அடிப்படையில் வழங்கப்படும் சிறப்புப் பெருமையாகும். ஒரு மொழி செம்மொழியாக அங்கீகரிக்கப்படுவதற்கான சில முக்கிய தகுதிகள் உள்ளன. அதாவது அந்த மொழியின் இலக்கியப் படைப்புகள் தொன்மையானவையாக இருக்க வேண்டும். அந்த மொழி தனித்தே இயங்கும் ஆற்றல் கொண்டதாய் இருக்க வேண்டும்.

பல்வேறு மொழிகளின் தாய் மொழியாய் அம்மொழி இருக்க வேண்டும். தோன்றி பல நூற்றாண்டுகளுக்குப் பின்னும் அதன் இலக்கியப் படைப்புகள் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்க வேண்டும். செம்மொழியின் இலக்கியப் படைப்புகள் பல்வேறு இலக்கிய வகைகளில் கவிதை, நாடகம், வரலாறு, தத்துவம், அறிவியல் நூல்களாக இருக்க வேண்டும். செம்மொழி பிற மொழிகளைச் சாராத ஒரு தனித்த மொழியாக இருக்க வேண்டும். இத்தகைய அத்தனை சிறப்புகளையும் ஒருங்கே கொண்டது தமிழ் மொழி.

வரலாற்று அறிஞர்கள் தமிழின் பிறப்பை கி.மு. 4 ஆம் நூற்றாண்டு என்று தெரிவிக்கின்றனர். ஆனால், “கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தோடு முன் தோற்றி மூத்தகுடி” என்பது தமிழ் சான்றோர்களின் கருத்து. தமிழின் மிகத் தொன்மையான படைப்புகளான இலக்கண நூலான தொல்காப்பியம், நன்னெறி நூலானதிருக்குறள், சங்க இலக்கியங்களான அகநானுறு, புறநானுறு, ஐம்பெரும் காப்பியங்கள்,

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு உள்ளிட்ட பல ஆயிரம் நூல்கள் தமிழுக்கு மகுடம் சூட்டுகின்றன . செந்தமிழ் நவீன இலக்கியத்திலும் தனது தனித்த முத்திரை பதித்து வருகிறது. விஞ்ஞான யுகத்திலும் கன்னித் தமிழ் கணினியிலும் வீறுநடைப் போட்டு வருகிறது.

மொழி வளமும் கவித்துவ அழகியலும் கொண்ட தமிழ் மொழிக்கு பெருமைச் சேர்க்கும் வண்ணம் முத்தமிழிஞர் டாக்டர்.கலைஞர் அவர்கள் 2004 ஆம் ஆண்டு செம்மொழி ஆங்கீகாரம் பெற்று தந்தார். கோவையில் செம்மொழி மாநாட்டையும் நடத்தினார். தமிழ் எழுத்தையும் பேச்சையும் இறுதி வரை தனது மூச்சாக கொண்டு வாழ்ந்தவர். தெற்கே உதித்த ஒளி குன்றாத சூரியன். உலகம் போற்றும் உன்னத அரசியல் தலைவர். தொல்காப்பியத்திற்கும், திருக்குறளுக்கும் உரை எழுதியவர். பல அரிய படைப்புகளை தமிழுக்கு அளித்து தமிழ் வளர்ச்சிக்கு பெரும் தொண்டு ஆற்றியவர்.

இத்தகைய அவரின் பெரும் பணிகளையும் செம்மொழியான தமிழ் மொழியையும் போற்றும் வகையிலும் செம்மொழி தமிழாய்வு நிறுவனம் ஆண்டுதோறும் சிறந்த தமிழ் அறிஞருக்கு செம்மொழி விருது வழங்கி சிறப்பித்து வருகிறது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜூன் 3ஆம் தேதியை செம்மொழி நாளாக அறிவித்து தமிழ்நாடு அரசு சிறப்பித்துள்ளது.

செம்மொழிக்கு மேலும் பெருமைச் சேர்க்கும் விதமாகவும், முத்தமிழறிஞரின் பெரும் தமிழ்த் தொண்டை போற்றும் வகையிலும் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் செய்தி ஊடக மையம் வாயிலாக செம்மொழியான தமிழ்மொழியாம் என்ற தலைப்பில் பொதுமக்கள் மற்றும் மாணாக்கர்கள் பங்கு பெறும் வகையில் சமூக ஊடகங்களான எக்ஸ் தளம்(X), படவரி(Instagram), முகநூல்(Facebook), புலனம் (WhatsApp), வலையொளி (YouTube) வாயிலாக கலை இலக்கியப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போட்டிகளும் அதன் விவரங்களும் வருமாறு:-

1. **தமிழ் சொற்பொழிவுப் போட்டி**

“செம்மொழி தமிழ் வளர்ச்சியில் கலைஞரின் பங்கு

கணினி யுகமும் கன்னித்தமிழும்

ஆகிய இரண்டு தலைப்புகளில் ஏதாவது ஒன்றில் 1 நிமிடத்திலிருந்து 2 நிமிடங்களுக்கு மிகாமல் பேசி காணொளியாக எடுத்து அனுப்ப வேண்டும்.

2. **தமிழ் கவிதை எழுதும் போட்டி** (Tamil Poetry Writing)

இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

தமிழே அமுதே!

இரு தலைப்புகளில் ஏதாவது ஒன்றில் 20 வரிகளுக்குள் கவிதை எழுதி கோப்புகளாக அனுப்ப வேண்டும். கவிதை இதற்கு முன் வேறு எங்கும் பிரசுரம் ஆகியிருக்கக் கூடாது.

3. **வினாடி வினாப் போட்டி**

சங்க இலக்கியம்

கலைஞரின் இலக்கியப் படைப்புகள்

கீழே கொடுக்கப்பட்டுள்ள கூகுள் பார்ம் வழியாக பதிவு செய்தல் வேண்டும்

4. **அறநெறிக் கதைகள்** (Moral Story Telling)

திருக்குறள், சங்க இலக்கியம் உள்ளிட்டவற்றில் சொல்லப்பட்ட செய்திகளை கதைகளாகச் சொல்லி காணொளியாக எடுத்து அனுப்ப வேண்டும்.

5. **என்னுள் இருக்கும் கலைஞர்**

காலத்தை வென்ற தமிழ் அல்லது தமிழ் வளர்த்த அறிஞர்கள் உள்ளிட்டவை கருப்பொருளாக கொண்டு கணினி வரைப் படங்கள் அல்லது ஓவியங்கள் வரைந்து அனுப்ப வேண்டும்.

போட்டிகளில் கலந்து கொள்வதற்கு கீழ்க்கண்ட க்யூஆர் கோட்டினை ஸ்கேன் செய்யவும்.

இவ்வாறு அவ்வறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞரால் கொண்டு வரப்பட்ட

சேலம் உருக்காலை தொடர்ந்து லாபகரமாக நடந்து வருகிறது!

உருக்காலையில் நடைபெற்ற கலைஞர் பிறந்த நாள் விழாவில்–அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேட்டி!

சேலம், ஜூன் 4 -

சேலம் உருக்காலையை கொண்டு வந்த முன்னாள் முதல்வர் கலைஞருக்கு நன்றி செலுத்தும் விதமாக உருக்காலை தொழிலாளர்கள் சார்பில் நடந்த நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் பங்கேற்று கலைஞரின் புகைப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.....

அறிஞர் அண்ணாவின் கனவை நனவாக்கும் வகையில், முன்னாள் முதலமைச்சர் கலைஞர் 1970 இல் அன்றைய பிரதமர் இந்திரா காந்தி மூலம் உருக்காலையை கொண்டு வந்தார் என்றும் கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக லாபகரமாக இயங்கும் பொது துறை நிறுவனம் வருவதற்கு காரணமானவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் என்று சுற்று லாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் பெருமிதம் பொங்கக் குறிப்பிட்டார்.

முன்னாள் முதலமைச்சர் கலைஞரின் 102 வது பிறந்தநாள் விழா தமிழகத்தில் உற்சாகமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக

சேலம் மத்திய மாவட்ட திமுக சார்பில் சேலம் மத்திய மாவட்ட செயலாளரும் சுற்றுலாத்துறை அமைச்சருமான ராஜேந்திரன் நேற்று சேலம் மாநகராட்சி அண்ணா பூங்காவில் அமைந்துள்ள 16 அடி உயர கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். பின்னர் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து சேலத்தின் அடையாளமாக திகழும் சேலம் ஒரு காளையை கொண்டு வந்த கலைஞர் அவர்களுக்கு நன்றி கூறும் விதமாக ஒரு காலை தொழிலாளர் முன்னேற்ற தங்கத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் கலந்து கொண்டு கலைஞரின் திருஉருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து நிகழ்ச்சியில் பங்கேற்ற அந்த பகுதி மக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இனிப்புகளை வழங்கினார்.

இதனையடுத்து சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

சேலம் உருக்காலை பேரறிஞர் அண்ணாவின் கனவு திட்டமாகும். இதே போன்று தூத்துக்குடி ஆழ் கடல் துறைமுகம் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று அறிஞர் அண்ணா எழுச்சி நாளை நடத்தினார்.

இதனைத் தொடர்ந்து கலைஞர், அறிஞர் அண்ணாவின் கனவு திட்டமான உருக்காலையை கொண்டு வர தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்தி வந்தார்.

குறிப்பாக பிரதமர் இந்திராகாந்தியிடம் நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் சேலம் உருக்காலையை சேர்க்க வலியுறுத்தினார்.

அதன்படி முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி , நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் சேலம் உருக்காலை

அமைக்கப்படும் என வாக்குறுதி அளித்தார்.

அறிவித்தப்படி கடந்த 1970 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. அப்போது முதலமைச்சராக இருந்த கலைஞர் தலைமையில் , அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி கலந்துகொண்டு அடிக்கல் நாட்டப்பட்டது.

இதனைதொடர்ந்து சேலம் உருக்காலை உருவானது.

50 ஆண்டுகளுக்கு மேலாக லாபகரமாக சேலம் உருக்காலை இயங்கி வருகிறது.

இதனிடையே 2006 11ஆம் ஆண்டு திமுக தலைமையிலான ஆட்சியில் முதலமைச்சர் கலைஞர் , சேலம் உருக்காலை விரிவாக்கம் செய்யப்பட வேண்டும் என்று அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங்கிடம் வலியுறுத்தினார். அதன்படி 2000 கோடியில் விரிவாக்கம் செய்யப்பட்டது.

அப்போது முன்னாள் முதலமைச்சர் கலைஞர் தலைமையில் நடந்த உருக்கலை விரிவாக்க விழாவில் அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் அப்போதைய தலைவர் சோனியாகாந்தி ஆகியோர் பங்கேற்றனர். அப்போது துணை முதல்வராக இருந்த இப்போதைய முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் விரிவாக்கத்திற்கான பணிகளை மேற்கொண்டார்.

சேலம் உருக்காலை உருவாகவும், சிறப்பாக செயல்படவும் காரணமாக இருந்த கலைஞருக்கு நன்றி செலுத்தும் வகையில் உருக்காலை தொழிலாளர்களும், இரும்பாலை சேர்ந்த பகுதி மக்களும் ஏற்பாடு செய்த கலைஞர் பிறந்தநாள் விழாவில் பங்கேற்பதில் பெருமை கொள்கிறேன்.

ஜூன் 3, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு சைதை மேற்கு பகுதி 142வது (அ) வட்ட திமுக சார்பில் வட்ட கழக செயலாளர் எஸ்.பி.கோதண்டம் ஏற்பாட்டில், வாணியர் தெருவில் சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலகுழு தலைவருமான எம். கிருஷ்ணமூர்த்தி கழக இருவண்ணக்கொடியேற்றி, தலைவர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார். இந்நிகழ்வில் களக்காடிஎல்லப்பன், ஆர்.ரமேஷ், எம்.நாகா, பொன்ஜெய்சிங், ஆர்.எல்.காந்தன், ஆர்.கிருஷ்ணகுமார், நா.மணிகண்டன், ஏ.எஸ்.பழனி, என்.சம்பந்தம், எல்.கார்த்திக், எம்.சேக்தாவூத், கே.சி.பழனிபாரதி, கோயில்மணி, எம். பாலாஜி, வெ.கிஷோர்குமார், அன்சர்கான், காரணிமூர்த்தி, ரகு, ஆர்.டி.மூர்த்தி, ரவி, சம்பத், கோயில்மணி, பெரியண்ணன், ராம்பிரபு, ரூபேஷ்குமார், சிவகுருநாதன், செல்வம், சுரேஷ், நடராஜன் உள்ளிட்ட கழகத் தோழர்கள் கலந்துகொண்டனர்.

தி.மு.க. இளைஞர் அணி

இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

திருச்சி தெற்கு, திருச்சி வடக்கு மற்றும் திருச்சி மத்திய மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

நாள்	நேரம்	கழக மாவட்டம்	இடம்
04.06.2025 புதன்கிழமை	காலை 9.30 மணி	திருச்சி வடக்கு	ஸ்ரீ தனலட்சுமி மணி மஹால், உளுந்தங்குடி பைபாஸ் சாலை பாலம் அருகில், மண்ணச்சநல்லூர், திருச்சி.
	மாலை 4.00 மணி	திருச்சி மத்திய	கலைஞர் அறிவாலயம், கரூர் பைபாஸ் சாலை, திருச்சி.

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 02-06-2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

தமிழ்நாட்டில் அரசுப் பேருந்து கட்டணம் உயர்த்தப்படாது!

போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் மீண்டும் உறுதி!

அரியலூர், ஜூன் 4-

தமிழ்நாட்டில் அரசுப் பேருந்து கட்டணம் உயர்த்தப்படாது என்று போக்குவரத்துத் துறை அமைச்சர் சிவசங்கர் உறுதிபட தெரிவித்துள்ளார். அரசுப் பேருந்து கட்டணம் உயர்த்தப்படுவதாக வெளியாகும் செய்திகள் தவறானது என்றும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

அரியலூரில் செய்தியாளர்களிடம் பேசிய போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர், குறிப்பிட்ட சில ஊடகங்களிலும், சமூக வலைதளங்களிலும் தமிழ்நாட்டில் பேருந்து கட்டணம் உயர்த்தப்படவுள்ளதாக ஒரு தவறான செய்தி பரப்பப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

ஏற்கனவே சில முறை இதுபோன்று பேருந்து கட்டணம் உயர்வு என்ற தகவல் வந்தபோது கூட ஒரு காலத்திலும் பேருந்து கட்டணம் உயர்த்தப்படவில்லை. தமிழ்நாட்டில் போக்குவரத்து துறைகள் இழப்பில் இருந்தாலும், பொருளாதார சிக்கலில் இருந்தாலும், ஒன்றிய அரசு டீசல் விலையை பலமுறை கூட்டி இருந்தாலும் ஒரு போதும் பேருந்து கட்டணம் உயர்த்தப்பட்டதில்லை என்று அமைச்சர் சிவசங்கர் தெரிவித்துள்ளார். எனவே தமிழ்நாட்டில் இப்போதும் பேருந்து கட்டணமும், மின்சார கட்டணமும் உயர்த்தப்படாது என்று அவர் உறுதிபட தெரிவித்தார்.

புதுக்கோட்டையில் மாணவர்களுக்கு பாடப் புத்தகங்கள் - சீருடைகள்!

அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார்!

புதுக்கோட்டை, ஜூன் - 4 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் (02.06.2025) அன்று சென்னை, திருவல்லிக்கேணி, லேடி வில்லிங்டன் அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 2025-26 ஆம் கல்வியாண்டிற்கான புதிய பாடநூல்கள், சீருடைகள், நோட்டு புத்தகங்கள் மற்றும் பிற கல்வி உபகரணப் பொருட்களை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கி, இந்நிகழ்வினை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில் , புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு. வை.முத்துராஜா, புதுக்கோட்டை மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி, மாவட்ட கல்வி அலுவலர்கள் ரமேஷ் (புதுக்கோட்டை), செந்தில், ஜெயந்தி, கலா ராணி (அறந்தாங்கி), லீலாவதி (தனியார் பள்ளிகள்), மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் க.ஸ்ரீதர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் க.ந.கோகுலப்பிரியா, பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் பெரியண்ணன் அரசு, முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் த.சந்திர சேகரன், புதுக் கோட்டை வட்டாட்சியர் மு.செந்தில்நாயகி, இராணியார் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் ஜெ.தமிழரசி, மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் முனைவர். சாலை செந்தில், பள்ளித் துணை ஆய்வாளர்கள் வேலுச்சாமி, குருமாரி முத்து மற்றும் எம்.எம். பாலு, நைனாமுகமது, சண்முகநாதன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் செம்மொழி நாள் கொண்டாட்டம்!

தூய்மைப் பணியாளர்களுக்கு நல உதவிகள்!

சென்னை, ஜூன் 4-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, செந்தமிழ் நாள் விழா கொண்டாடப்பட்டு, நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜூன் 3 செந்தமிழ் நாள் கொண்டாட்டம், 17வது வட்டம் வடபெரும்பாக்கம் மாநகராட்சி அலுவலகம் அருகே நடைபெற்றது.

கழக அலுவலகம் அருகே அமைக்கப்பட்டுள்ள கழக கொடிக்கம்பத்தில் இருவண்ணக் கொடியை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்றி வைத்தார்.

பின் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவப்படத்திற்கு கழகத்தினர், பொதுமக்கள், தூய்மை பணியாளர்கள் என பல மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள். முத்தமிழ் அறிஞர் கலைஞரின் புகழ் ஓங்குக, தமிழ்நாடு முதலமைச்சர் வாழ்க, தமிழ்நாடு துணை முதலமைச்சர் வாழ்க போன்ற கோஷங்களை எழுப்பி, 2026 ஆம் ஆண்டு நடைபெற இருக்கின்ற சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் தமிழ்நாடு முதலமைச்சராக கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களை பொறுப்பேற்க பாடுபடுவது என கோஷங்கள் எழுப்பினார்கள்.

17 வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், நூற்றுக்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்கள் மத்தியில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் உருவம் குறித்த கேக் வெட்டப்பட்டது. கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாடிய தூய்மை பணியாளர்களுக்கு மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் சேலைகள் மற்றும் மதிய உணவு வழங்கினார்.

நிகழ்ச்சியில் வட்டக் கழக நிர்வாகிகள் சி . பாலாஜி சீ மூர்த்தி, குதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என். அஜய் தென்னவன், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எலந்தனூர் வி. சிவப்பிரகாஷ், பாக முகவர் டி. திவாகர், திருநிலை எஸ். எம். சதீஷ்குமார், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே. சண்முக பிரியன், மாவட்ட அமைப் புசாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் எஸ். சிவக்குமார், அயலக அணி துணை அமைப்பாளர் எச். பீர் முகமது,மாவட்ட விவசாய அணி துணை அமைப் பாளர்கள் டி. வினோத், ஜி. நாகராஜன், என். நாகராஜன், ஜி, கார்த்திக்,என் நாகராஜன், வட பெரும்பாக்கம் எம். மைக்கேல், பி. செந்தில் ,இ. கார்த்திக், எம். கோவிந்தன், வக்கீல் எம். என். தளபதி, விநாயகபுரம் கமலநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் செய்திருந்தார்.

மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜூன் 3 செம்மொழி நாள் விழாவை முன்னிட்டு, 17வது வட்டம் வடபெரும்பாக்கம் பகுதியில் உள்ள சென்னை மாநகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. கழகத்தின் இரு வண்ண கொடியேற்றி, கலைஞரின் உருவம் பொறித்த கேக் வெட்டி தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை புழல் எம். நாராயணன் வழங்கினார். 17–வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாதவரம் வடக்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எம்.என்.அஜய் தென்னவன், எலந்தனூர் வி. சிவபிரகாஷ், பாக முகவர் டி.திவாகர், திருநிலை எஸ்.எம்.சதீஷ்குமார், கே.சாந்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.